2015 திசெம்பர் மாதம் 04ஆம் திகதி ஆரம்பித்து 2015 திசெம்பர் 14ஆந் திகதி வரையில் குழுவானது 07கூட்டங்களை நடத்தியுள்ளது.

கௌரவ அமைச்சர்கள், குறித்த அமைச்சுக்களின் பிரதம முன்னோடி உத்தியோகத்தர்கள் மற்றும் திறைசேரி உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன், 2015 திசெம்பர் 16ஆந் திகதி குழு அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**தற்காலிக குழு**

**பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம்**

ஏழாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமானது கௌரவ சுமேதா ஜீ. ஜயசேனவின் தலைமையில் அனைத்து பெண் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு விளங்கியது.

2015ஆம் ஆண்டில் ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் இக்குழுவானது 04 கூட்டங்களை நடத்தியுள்ளது.

2015ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 2015 மார்ச் 07ஆம் திகதி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும், வெளிநாட்டு தூதுவர்களினதும், அரசாங்க உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் விசேட மாநாடு நடத்தப்பட்டது.

8வது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமானது கௌரவ சந்திராணி பண்டாரவின் தலைமையில் 2015ஆம் ஆண்டினுள் 03 கூட்டங்களை நடத்தியுள்ளது.

**சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியம்**

ஏழாவது பாராளுமன்றத்தின் சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியமானது கௌரவ சுதர்ஷனீ பெர்னாந்துபுள்ளேயின் தலைமையில் 17 பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு விளங்கியது. இக்காலப்பகுதியில் ஒன்றியமானது ஒரு கூட்டத்தை நடத்தியுள்ளது.

எட்டாவது பாராளுமன்றத்தின் சிறுவர்களுக்கான பாராளுமன்ற ஒன்றியத்தின் தவிசாளர் பதவியை கௌரவ சுதர்ஷனீ பெர்னாந்துபுள்ளே வகிப்பதுடன், 2015 திசெம்பர் மாதம் 31ஆந் திகதியளவில் மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**5.3 சட்டமூல அலுவலகம்**

பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்படும் சட்டமூலங்களை அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தயாரித்தல், ஒப்பிட்டுப் பார்த்தல் மற்றும் இதனுடன் தொடர்பானதும் இடைநேர்விளைவானதுமான நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தினால் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

2015ஆம் ஆண்டில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 33 சட்டமூலங்கள் இந்த அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றதுடன், 80 தனியார் உறுப்பினர் சட்டமூலங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை 17 ஆகும். (16 அரசாங்க சட்டமூலங்கள், ஒரு அரசியல் அமைப்பு திருத்தம் இதற்குள் உள்ளடங்கும்)

(2015 சட்டமூலத்திற்கு தயவுசெய்து பின்னிணைப்பு 2 ஐப் பார்க்கவும்).

2015 ஆம் ஆண்டில் நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சட்டமூலங்கள், நியதிச் சட்டமூலங்கள் குறித்து பரிசீலிப்பதற்கான சட்டவாக்க நிலையியற் குழுக் கூட்டங்கள் 04 நடத்தப்பட்டுள்ளதுடன், இக்குழுக்களில் தனியார் உறுப்பினர் சட்ட மூலங்கள் ஆராயப்பட்டன.

2015ஆம் ஆண்டில் சட்டமூல அலுவலகமானது மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

அ) 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 19வது அரசியலமைப்புத் திருத்தத்தை அரசியலமைப்பினுள் உள்வாங்கி, மும்மொழியிலும் தயார் செய்து திருத்தங்கள் அனைத்தும் உள்ளடங்கிய அரசியலமைப்பாக அச்சிடுதல்.

ஆ) பாராளுமன்ற இணைய அகத்தில் (intranet) பதிவேற்றம் செய்யப்பட்ட சட்டவாக்க சேவைகள் பற்றிய தகவல்களை பாராளுமன்ற இணையத் தளத்தின் ஊடாக பொதுமக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மும்மொழிகளிலும் பெற்றுக் கொள்வதற்கு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

இ) சட்டமூலங்கள் தொடர்பான சட்டவாக்க சேவைத் தகவல் முறைமையை இற்றைப்படுத்தல்.

ஈ) 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சட்டங்களையும் தொகுத்து ஒரு புத்தகமாக வடிவமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உ) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்களினது வேண்டுகோளுக்கிணங்க சட்டமூலங்கள்/சட்டங்கள் தொடர்பாகவும் அவை நிறைவேற்றப்படும் செயன்முறை தொடர்பாகவும் கடந்த வருடத்திலும் சட்டமூல அலுவலகத்தினால் தகவல்கள் வழங்கப்பட்டன.

### 5.4 சபை ஆவண அலுவலகம்

பாராளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாட்டுக்கான சபையின் அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் சபை ஆவண அலுவலகத்தின் பணியாகும்.

2015ஆம் ஆண்டினுள் ஏழாவது பாராளுமன்றத்தில் 41 அமர்வுகளும் எட்டாவது பாராளுமன்றத்தில் 41 அமர்வுகளுமாக மொத்தம் 82 பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் சபை ஆவண அலுவலகத்தினால் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன:

**i)** எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பிரேரணைகள் மற்றும் வினாக்களை உள்ளடக்கிய மூன்று ஒழுங்குப் புத்தகங்களுடன் அவற்றுக்கான 38 அனுபந்தங்களும், 82 பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான ஒழுங்குப் பத்திரங்களும் கூட்ட அறிக்கைகளும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.

ii) மேற்குறிப்பிட்ட அச்சிடப்பட்ட ஒழுங்குப் புத்தகங்கள், அவற்றுக்கான அனுபந்தங்கள் மற்றும் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரங்கள் ஆகியவற்றை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனத் தலைவர்களுக்கு தேசிய விரைவுத் தபால் சேவை மூலம் முறையாக விநியோகிப்பதற்கும் அவற்றை சபாபீடத்தில் வைப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

iii) ஒவ்வொரு அமைச்சினாலும் அனுப்பப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் 425 செயலாற்றுகை மற்றும் வருடாந்த அறிக்கைகளையும், பல்வேறு சட்டங்களின் கீழ் தயார் செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை உள்ளடக்கிய பிரேரணைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

iv) ஏழாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 277 வாய்மூல விடைக்கான வினாக்களும் எட்டாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 400 வாய்மூல விடைக்கான வினாக்களுமாக மொத்தம் 677 வாய்மூல விடைக்கான வினாக்கள் நிலையியற் கட்டளைகளுக்கு இணங் பதிப்பிக்கப்பட்டு மும்மொழியிலும் ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

v) ஏழாவது மற்றும் எட்டாவது பாராளுமன்ற உறுப்பினர்களின் 160 தனியார் உறுப்பினர் பிரேரணைகள் மற்றும் 03 திகதியிடப்படாத பிரேரணைகள் பொறுப்பேற்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டு மும்மொழிகளிலும் அவற்றை ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

vi) ஏழாவது பாராளுமன்றத்துக்கான பாராளுமன்ற அலுவல்கள் குழுவின் 32 அமர்வுகளும், எட்டாவது பாராளுமன்றத்துக்கான குறித்த குழுவின் 13 அமர்வுகளும் கூட்டப்பட்டு, இது பற்றிய கூட்ட அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிடவும், குறித்த தீர்மானங் களுக்கான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகள் இப்பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2015ஆம் ஆண்டின் 8வது பாராளுமன்ற காலப்பகுதிக்கான கட்சித் தலைவர் கூட்டங்கள் 02 நடத்தப்பட்டுள்ளன.

vii) அதிமேதகு சனாதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்ற 02 அறிவித்தல்கள், சபாநாயகரின் 19 அறிவித்தல்கள், 09 அரசாங்க சட்டமூலங்கள் உள்ளடங்கலான 27 சட்டமூலங்கள், சட்டமூலங்கள் பற்றிய உயர் நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் அமைச்சர்களின் பத்திரங்கள் சமர்ப்பித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய பாராளுமன்ற அமர்வுகளுக்கான தினப் பணிகளின் நிகழ்ச்சிநிரலை மும்மொழியிலும் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

viii) 2015ஆம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு 07 அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு, குறித்த ஹன்சாட் அறிக்கையினை காலமான உறுப்பினரது துணைக்கு அல்லது உயிர் வாழுகின்ற அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ix) பாராளுமன்ற உறுப்பினர்களின் தரவுகள் மற்றும் தகவல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கனிணி மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதலும், அவற்றை அடிக்கடி இற்றைப்படுத்துதலும்.

x) எட்டாவது புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களின் தகவல்களை சேகரித்தல் மற்றும் பாராளுமன்ற நடைமுறை குறித்து அவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக 2015 ஓகஸ்ட் மாதம் 24, 25 மற்றும் 26ஆந் திகதிகளில் தகவல் கருமபீடத்தை நடாத்துதல் மற்றும் பெற்றுக் கொண்ட சகல தரவுகளையும் கனிணி முறைமையில் உட்புகுத்துதல்.

xi) 2015.03.13ஆந் திகதி இந்திய பிரதமர் கௌரவ நரேந்திர ஸ்ரீ மோதி இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான அனைத்து பத்திரங்களையும் தயார் செய்து சபை அலுவல்களை ஒழுங்கு செய்தல்.

xii) 2015.09.01ஆந் திகதி எட்டாவது புதிய பாராளுமன்றத்தை வைபவரீதியாக திறந்து வைக்கும் ஆரம்ப அமர்வின்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்துக்கான ஆவணங்களைத் தயார் செய்து சபை அலுவல்களை ஒழுங்கு செய்தல்.

xiii) 14ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளின் பிரகாரம், 02 விசேட பாராளுமன்ற அமர்வுகளை 2015.02.02 மற்றும் 2015.07.03ஆகிய திகதிகளில் கூட்டுவதற்கான ஆவணங்கள் அனைத்தையும் தயார் செய்தலும், சகல உறுப்பினர்களுக்கும் இந்த அமர்வுகள் குறித்து அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

xiv) 2015.04.28ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்துடன் தொடர்புடைய விசேட அலுவல்களை ஒழுங்கு செய்தல்.

### 5.5 நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் பங்களிப்புகள் பற்றிய சுருக்கம்:

#### 1) படைக்கலச் சேவிதர் திணைக்களம்

பாராளுமன்ற செயன்முறையை நிறைவேற்றுகையில், கௌரவ சபாநாயகர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பணியாள்தொகுதியினர், பாராளுமன்ற பணியாள்தொகுதியினர் மற்றும் இணைந்த பணயாட்டொகுதியினர் ஆகிய பிரிவுகளுக்கு தேவையான வசதிகளை வழங்கும் முகமாக, தொழில் ரீதியாக காலத்துக்கேற்ற சேவைகளை வழங்குவது இந்த திணைக்களத்தின் கடமையாகும்.

2015ஆம் ஆண்டில் படைக்கலச் சேவிதர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகள்

i) பாதுகாப்பு அலுவல்கள்

பாராளுமன்றத்தின் பாதுகாப்பினை சிறந்த மட்டத்தில் பேணுவதுடன், பூர்வாங்க பாதுகாப்பு குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ஓரளவுக்கு தளர்த்துவதற்கான செயன்முறை 2010ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. கௌரவ சபாநாயகரின் ஆலோசனையின் பிரகாரம் குறித்த செயன்முறையானது 2015ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாதுகாப்பினை உயர்ந்த மட்டத்தில் பேணும் அதேசமயம், பாதுகாப்பு ஏற்பாடுகளை தளர்த்துவதற்கான இயலுமை 2015ஆம் ஆண்டிலும் கிட்டியதுடன், இது தொடர்பிலான தீர்மானங்கள் குறித்து கௌரவ உறுப்பினர்கள் மற்றும் பணியாள்தொகுதியினரையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் மூலம், கௌரவ உறுப்பினர்கள், பாராளுமன்ற பணியாள்தொகுதியினர் மற்றும் கடமை நிமித்தம் பாராளுமன்றத்துக்கு வருகை தரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மாத்திரமன்றி பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக வருகை தரும் பொதுமக்களுக்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களின் கீழ் பாராளுமன்ற பணியாள்தொகுதியினர் மற்றும் இணைந்த பணியாள்தொகுதியினருக்கான செயலமர்வுகள், கருத்தரங்குகள் ஆகியவை ஒழுங்கு செய்யப்பட்டதுடன், படைக்கலச் சேவிதர் திணைக்களத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

ii) திணைக்களத்தினால் 2015ஆம் ஆண்டினுள் ஒழுங்கு செய்யப்பட்ட வைபவங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள்-

1. 2015ஆம் ஆண்டு அரசாங்க உத்தியோகத்தர்களின் சத்தியப்பிரமாணம் வழங்கும் வைபவம்
2. இந்து சமய வைபவம் மற்றும் சரஸ்வதி பூஜை
3. வெளிநாட்டு தூதுக்குழுக்கள் விஜயம் தருகையில் குறித்த நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்
4. வெளிநாட்டு தொடர்புகள் மற்றும் ஒழுங்குமரபு அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்படும் வைபவங்கள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல்.
5. படைக்கலச் சேவிதர் திணைக்களத்தினால் முன்வைப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய விதப்புரைகள் பாதுகாப்பு பிரிவுகளின் செயற்திறனை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளன.
6. பணியாள் தொகுதி நுழைவாயில் மற்றும் உறுப்பினர் நுழைவாயில்களில் பொருத்தப் பட்டுள்ள புதிய எக்ஸ் கதிர் முறைமை உள்ளிட்ட எக்ஸ் கதிர் முறைமையின் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7. 'ஜயந்திபுர' மற்றும் 'நுக செவன' நுழைவாயில்களின் பாதுகாப்பு நிலமைகளை மேம்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், புதிய நிர்மாணப் பணிகளுக்கான நிதி ஏற்பாடுகள் 2015ஆம் ஆண்டிலும் கிடைக்கப்பெறவில்லை.

iii) கௌரவ சபாநாயகருக்கான உத்தியோகபூர்வ தேவைகளைப் பூர்த்திசெய்தல்.

iv) 2015.01.08ஆந் திகதி தெரிவு செய்து நியமிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் வைபவரீதியாக பாராளுமன்றத்தை திறந்து வைக்கும் வைபத்தை ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைளை கௌரவ சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அறிவுரைகளின் பிரகாரம் மேற்கொள்ளுதல்.

v) 2015.08.17ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலின்போது தெரிவு செய்து நியமிக்கப்பட்ட புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்தப்படட தகவல் கருமபீடத்தில், படைக்கலச் சேவிதர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கடமை மற்றும் பொறுப்புக்கள் குறித்து அவர்களை விழிப்புணர்வூட்டி, தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலும், தற்காலிக மற்றும் நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குதலும்.

vi) விசேட விருந்தினர் வருகை ( VIP Visits)

2015ஆம் ஆண்டில் விசேட விருந்தினர்களின் வருகை சுமார் 450ஆகக் காணப்பட்டது.

vii) பல்வேறுபட்ட குழுக்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

(அ) அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் உள்ளிட்ட வருடாந்த அனுமதிப் பத்திரங்கள் 658 வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக நாளாந்தம் வழங்கப்படும் கலரி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அரசாங்க அலுவலர் கூடத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் உள்ளிட்ட 2325 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) பணியாள் தொகுதியினரின் தனிப்பட்ட வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் 591 வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) உறுப்பினர்களின் சாரதிகளுக்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் 225 வழங்கப்பட்டுள்ளன.

(உ) பத்திரிகை நிருபர்கள் மற்றும் பத்திரிகை செய்தியாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் 174 வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

| விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கலரி அனுமதிப் பத்திரங்கள் | 16150 |
| பாராளுமன்றத்தை/ அமர்வை பார்வையிடுவதற்கான குழு அனுமதிப் பத்திரங்கள் | 3150 |
| குழுக்களாக வருகை தந்த பாடசாலை மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 22520 |
| தற்காலிக மாதாந்த அனுமதிப்பத்திரங்கள் | 1050 |
| பாராளுமன்றத்தை/ அமர்வை பார்வையிடுவதற்கு முன்கூட்டிய அனுமதியின்றி வருகை தந்த குழுக்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 50580 |

(உ) நுழைவாயில் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

| | |
|---|---|
| கையடக்கத் தொலைபேசி, கெமரா கருவிகள் ஆகியவற்றை எடுத்து வருதல் | 8100 |
| பொருட்களை எடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் | 1225 |

(ஊ) அமைச்சு /திணைக்கள பணியாள் தொகுதிக்கான அனுமதிப்பத்திரங்கள்

பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வருகைதருகின்ற மோட்டார் சைக்கிள் தூதேவலாளர்கள் பாராளுமன்றத்துக்கு வருகைதருவதற்காக அனுமதி வழங்குகின்ற குறிப்பிடத்தக்களவு கடிதங்களும் 2015 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ளன.

**(2) ஹன்சாட் திணைக்களம்**

i) 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற 82 பாராளுமன்ற அமர்வுகள் ஹன்சாட் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.

ii) வருடத்தினுள் நடத்தப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு, உயர் பதவிகள் பற்றிய குழு, சிறப்புரிமைகள் பற்றிய குழு, பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், சிறுவர் ஒன்றியம், நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு, ஆலோசனைக் குழுக்கள் (விசேட), நிலையியல் குழுக்கள், பாராளுமன்ற அலுவல்களுக்கான குழு உள்ளிட்ட 51 குழுக்கூட்டங்கள் அறிக்கையிடலுக்கு உட்படுத்தப்பட்டன.

iii) 20 ஹன்சாட் பிரிவுத்தொகுதிகள் கட்டுவதற்காக அனுப்பப்பட்டன.

iv) காலமான 07 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களது அனுதாபப் பிரேரணைகள் உள்ளடங்கிய 07 ஹன்சாட் அறிக்கைகள் அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டன.

v) 45 குழு அறிக்கைகளை பதிப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

vi) பாராளுமன்ற செயன்முறை தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், பாராளுமன்றத்தினுள் இடம்பெறும் நடவடிக்கைகள் பற்றிய சூசிகையை பேணுதல், பாராளுமன்றம் மற்றும் குழுக்களில் இடம்பெறும் செயன்முறைகள் பற்றிய குரல் பதிவினை மேற்கொள்ளுதல்.

**3) பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம்**

i) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையினுள் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

ii) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களில் பங்கேற்கும் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கும் சிங்களம்/ஆங்கிலம், சிங்களம்/தமிழ், தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சமகால உரைபெயர்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

iii) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, பொது மனுக்குழு மற்றும் ஏனைய சமகால உரைபெயர்ப்பு வசதிகள் அற்ற குழு அறைகளில் அருகிலிருந்து உரைபெயர்ப்பு சேவையினை வழங்குதல்.

iv) பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் பிரசுரிக்கப்படும் வாய்மூல விடைக்கான வினாக்கள் மற்றும் எழுத்துமூல விடைக்கான வினாக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டன. உரைபெயர்ப்பாளர் அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவாலும் மொழிபெயர்க்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது;

| பிரிவு | மொழிபெயர்க்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| சிங்கள/ஆங்கில பிரிவு | : 551 |
| சிங்கள/தமிழ் பிரிவு | : 556 |
| தமிழ் / ஆங்கில பிரிவு | : 06 |

இவற்றிற்கு மேலதிகமாக, ஒத்திவைப்புப் பிரேரணைகள், தனியார் உறுப்பினர் பிரேரணைகள், சபை ஒத்திவைப்வைப்பு வேளை வினாக்கள், கௌரவ சபாநாயகரின் தீர்மானங்கள், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அறிக்கைகள், கணக்காய்வுக் குறிப்புகள், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அறிக்கைகள் மற்றும் தெரிகுழு அறிக்கைகள் ஆகியன மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

v) பொது மனுக் குழுவினால் அனுப்பப்பட்ட மனுக்களின் சாராம்சங்கள், பத்திரிகை விளம்பரங்கள், கடிதங்கள், அறிக்கைகள், தனியார் உறுப்பினர் பிரேரணைகள், பாராளுமன்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் கௌரவ சபாநாயகர் அலுவலகத்தில் இருந்து கிடைத்த ஆவணங்கள் ஆகியன சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன், உரைபெயர்ப்பாளர் அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவாலும் மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது;

| பிரிவு | மொழிபெயர்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை |
| --- | --- |
| சிங்கள/ஆங்கில பிரிவு | : 484 |
| சிங்கள/தமிழ் பிரிவு | : 411 |
| தமிழ் / ஆங்கில பிரிவு | : 393 |

**4) பாராளுமன்ற நூலகம்:**

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், பாராளுமன்ற நூலகத்தின் நூல்களை பாதுகாக்கும் நோக்கில் அவற்றை எண்ணியல் களஞ்சியமாக (Digital Repository) அமைக்கும் பொருட்டு, பொதுநலவாய அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் ஒத்துழைப்பினை கோரியதன் விளைவாக, குறித்த ஒன்றியத்தினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

i) கடந்த வருடத்தில் நூலகத்தின் பிரதான ஒன்றுதிரட்டில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் புதிய வெளியீடுகள் சேர்க்கப்பட்டன. இதில் 486 புத்தகங்கள், 30 பத்திரிகைகள் மற்றும் 16 வார சஞ்சிகைகள் உள்ளடங்குகின்றன.

ii) கௌரவ சபாநாயகர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட ஒட்டு மொத்த பணியாட்கள்; தொகுதியினரதும் கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பல்வேறுபட்ட தகவல்களும் இலகுவான பயன்பாட்டுக்கு ஏற்ற விதத்தில் தயார் செய்யப்பட்டன.

iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்களுடன் தொடர்புபடும் தகவல்களை உள்ளடக்கிய சுமார் 1300 கோப்புகள் தயார் செய்யப்பட்டன.

iv) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், பாராளுமன்றத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் பின்வரும் கருமங்கள் ஆற்றப்பட்டன.

உறுப்பினர்களது கோரிக்கைகள் - 260, கௌரவ சபாநாயகர்/ செயலாளர் நாயகம் அலுவலகத்தின் பணிகள் - 54, பின்புல அறிக்கைகள் -18, தொழில்நுட்ப அறிக்கைகள் – 12, ஆய்வுப் பத்திரங்கள் - 10

v) இவற்றுக்கு மேலதிகமாக, பாராளுமன்ற ஆராய்ச்சிப் பிரிவினால் ''பாராளுமன்ற நாளேடு – 2015'' வெளியிடப்பட்டது.

**5) தாபன அலுவலகம்/ உறுப்பினர் சேவைகள் அலுவலகம்/ உள்ளக கணக்காய்வு அலுவலகம்:**

5.1 **தாபன அலுவலகம்-**

i) 2015ஆம் ஆண்டில் பாராளுமன்ற பணியாள் தொகுதியில் 25 உத்தியோகத்தர்கள் பல்வேறான வெளிநாட்டுப் பயிற்சிகள்/ கல்விச் சுற்றுலாக்கள்/ மாநாடுகளில் பங்குபற்றியுள்ளனர் என்பதோடு, இவற்றில் சில பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி அனுசரணையில் ஒழுங்கு செய்யப்பட்டன.

ii) இலங்கை பொறியியலாளர் நிறுவனம், தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம், திறன் அபிவிருத்தி அமைப்பு, பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம், பிராக் நிறுவனம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம், இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் (SLIDA), கனிணி கற்கைகள் பிரிவு - கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை, லஸ்ஸன புளோரா, தேசிய சுவடிக்கூட திணைக்களம், டெக்நோப்ளஸ் ஒட்டோமேஷன், மற்றும் யுனைடற் மோடர்ஸ் லங்கா பீஎல்சீ ஆகிய நிறுவனங்களின் மூலம் பாராளுமன்ற பணியாள் தொகுதியில் பல்வேறு பதவிகளை வகிக்கும் ஏராளமான அலுவலர்களுக்கு பயிற்சிக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன், திறந்தவெளி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வீதி சமிஞ்கைகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சாதகமான மனப்பாங்குகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

iii) 2015ஆம் ஆண்டில் பணியாள் தொகுதி அங்கத்தவர்களின் நன்மைக்காக 750 இ.போ.ச. பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

iv) பாராளுமன்றத்துக்கான புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கை டெலிகொம் தொலைபேசி பெயர்ப்பட்டியலுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல், பாராளுமன்றத்தின் உள்ளக தொலைபேசி பெயர்ப்பட்டியலை இற்றைப்படுத்தலும் அச்சிடுதலும்.

v) 03 பொது விரிவுரைகள், மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**5.2 உறுப்பினர் சேவை அலுவலகம்-**

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது பதவியின் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் சேவைகளை உரிய விதத்தில் உரிய நேரத்தில் அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், பாராளுமன்றத்தின் உரிய பிரிவுகள் ஊடாக அவை உரிய விதத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்தலும் இப்பிரிவின் முக்கியமான பணியாகும்.

2015ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய கடமைரீதியிலான தொலைபேசி வசதிகளை வழங்குதல், அவர்களுக்குத் தேவையான காகிதாதிகளை உரிய அளவில் வழங்குதல், தனிப்பட்ட பாதுகாப்புக்கான துப்பாக்கிகளை வழங்குகையில் குறித்த இணைப்பாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை பராமரித்தல், நுவரெலியாவில் அமைந்துள்ள விடுமுறை இல்லத்தை பராமரித்தல் மற்றும் மாதிவெல உறுப்பினர் விடுதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகிய பணிகள் இப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.3 உள்ளக கணக்காய்வு அலுவலகம்:

i) பாராளுமன்றத்தின் மனித வளம் மற்றும் பொது வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் ஊடாக, நிறுவனரீதியான நோக்கங்களை அடையும் முகமாக தாபிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ii) கடந்த ஆண்டில், பாராளுமன்றத்தின் வழங்கல் மற்றும் சேவைகள் பற்றிய குறைபாடுகள், ஊழியர்கள் சேவைக்கு சமூகமளிப்பதில் காட்டும் அக்கறையின்மை, குளிரூட்டப்பட்ட களஞ்சிய அறை நடவடிக்கைகளில் இடம்பெறும் முறைகேடுகள் குறித்து விசாரித்து, முகாமைத்துவத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

iii) இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து, பாராளுமன்றத்தில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத பொருட்களை ஹோமகமை தொழிநுட்ப கல்லூரிக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 6) வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபு அலுவலகம்:


i) பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ii) கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதி சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு மேற்குறிப்பிட்ட சங்கங்களினால் நடத்தப்பட்ட மாநாடுகள், செயலமர்வுகள், சுற்றுலாக்கள், கூட்டங்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் கருத்தரங்குகளில் (21) பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

iii) இவற்றுக்கு மேலதிகமாக பாராளுமன்ற நட்புறவுச் சங்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய அலுவல்களும் நிறைவேற்றப்பட்டன. (தற்போது அத்தகைய 50 சங்கங்கள் இயங்குகின்றன).

### 7) தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

2015ஆம் ஆண்டில் தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில், தகவல் மற்றும் தொடர்பாடல் உட்கட்டமைப்பு முறைமையை பராமரித்தல், இணைய பாவனையை மேம்படுத்துதல், புதிய உள்ளக பிரயோகங்களை தயாரித்தல், உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட பிரயோகங்களை பராமரித்தல், பராமரிப்பு சேவை ஒப்பந்தங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பாராளுமன்ற இணையத்தளத்தை பராமரித்தல், வருகை முகாமைத்துவ முறையை தரமுயர்த்துதல் மற்றும் RFP கருத்திட்டத்தை வரைதல் ஆகியன முக்கியமானவையாகும்.



பிற்சேர்க்கை – 02

## 2015 இல் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள்

| இல. | சட்டமூல இல. | பெயர் | திகதி |
|---|---|---|---|
| 1 | 1/2015 | විසර්ජන (සංශෝධන)<br>ஒதுக்கீடு (திருத்தம்)<br>Appropriation (Amendment | 2015-02-07 |
| 2 | 2/2015 | ධීවර සහ ජලජ සම්පත් (සංශෝධන)<br>கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்)<br>Fisheries and Aquatic Resources (Amendment) | 2015-03-02 |
| 3 | 3/2015 | දුම්කොළ හා මධ්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරිය (සංශෝධන)<br>புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டம்<br>National Authority on Tobacco and Alcohol (Amendment) | 2015-03-03 |
| 4 | 4/2015 | අපරාධයක වින්දිතයන් සහ සාක්ෂිකරුවන් හට සහාය දීමේ සහ ආරක්ෂා කිරීමේ<br>குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு<br>Assistance to and protection of victims of crime and witnesses | 2015-03-07 |
| 5 | 5/2015 | ජාතික ඖෂධ නියාමන අධිකාරිය<br>தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை<br>National Medicines Regulatory Authority | 2015-03-19 |
| 6 | 6/2015 | මඩහපොල ශ්‍රී රත්තනපාලාරාම විහාරස්ථ සාසන හා බෞද්ධ අධ්‍යාපන සංවර්ධන පදනම (සංස්ථාගත කිරීමේ)<br>மடஹபொல ஶ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)<br>Madahapola Sri Rathanapalarama Religious and Buddhist Education (Incorporation) | 2015-04-06 |
| 7 | 7/2015 | ආගාමික හා විගාමික (සංශෝධන)<br>குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்)<br>Immigrants and Emigrants (Amendment) | 2015-06-03 |
| 8 | 8/2015 | ජාතික ගුරු අධ්‍යාපන අධිකාරිය (ඉවත් කිරීමේ)<br>தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்)<br>National Authority on Teacher Education (Repeal) | 2015-06-03 |
| 9 | 9/2015 | දේශීය ආදායම් (සංශෝධන)<br>உண்ணாட்டரசிறை (திருத்தம்)<br>Inland Revenue (Amendment) | 2015-10-30 |
| 10 | 10/2015 | මුදල්<br>நிதி<br>Finance | 2015-10-30 |
| 11 | 11/2015 | එකතු කළ අගය මත බදු (සංශෝධන)<br>சேர்பெறுமதி வரி (திருத்தம்) | 2015-10-30 |

| | | | |
|---|---|---|---|
| | | Value Added Tax (Amendment) | |
| 12 | 12/2015 | ජාතිය ගොඩනැගීමේ බදු (සංශෝධන)<br>நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)<br>Nation Building Tax (Amendment) | 2015-10-30 |
| 13 | 13/2015 | ආර්ථික සේවා ගාස්තු (සංශෝධන)<br>பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)<br>Economic Service Charge (Amendment) | 2015-10-30 |
| 14 | 14/2015 | ඔට්ටු ඇල්ලීම හා සූදු බදු (සංශේධන)<br>பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)<br>Betting and Gaming Levy (Amendment) | 2015-10-30 |
| 15 | 15/2015 | විසර්ජන (සංශෝධන)<br>ஒதுக்கீடு (திருத்தம்)<br>Appropriation (Amendment) | 2015-12-03 |
| 16 | 16/2015 | විසර්ජන<br>ஒதுக்கீடு<br>Appropriation | 2015-12-19 |